மேன்மை தங்கிய கூடுதல் மாவட்ட நீதிமன்றம் எண்5

திருநெல்வேலி

அ.வ.எண். 112 / 2024

ஸ்டீபன் ரவி -வாதி

/எதிர்/

அஜீத் - எதிர்வாதி

**ஷை வாதி பக்கம் வணக்கமாய் உ.ந.மு. சட்டம் கட்டளை 18 விதி 4(1) மற்றும் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யும் முதல் விசாரணை சாட்சிய ஆணையுறுதிப்பத்திரம்**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தாலுகா, சமூகரெங்கபுரம் துரைகுடியிருப்பு கீழூரில் க.எண்.72ல் வசிக்கும் ஜெபமாலை மரியான் குமாரர் கிருத்துவர் வயது 58 உள்ள ஸ்டீபன் ரவி ஆகிய நான் பிரம்மாணமாய் கூறுவதவாது

1.நான் இவ்வழக்கில் வாதி

2.என்னால் விளம்புகை மற்றும் இதர பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல்.

3. வழக்குச் சொத்து சமூகம் நீதிமன்ற அதிகார வரம்பிற்குள்பட்ட சமூகரங்கபுரம் கிராமத்தில் துரைகுடியிருப்பு கீழூரில் உள்ளது. அதுபோல் வழக்குச் சொத்து நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் முந்தைய புலஎண்842/1. தற்போதைய புலஎண் 1005/7இதன் விஸ்தீரணம் 3.76 செண்ட் ஆகும்

4. வழக்குச் சொத்து எனது தந்தை ஜெபமாலை மரியான் நாடாருக்கு பாத்தியப்பட்டது. ஜெபமாலை மரியான் நாடாருக்கு தொழில் எதுவும் கிடையாது. ஷையார் 24.2.23தேதியில் காலம் சென்றுவிட்டார். ஷையாருக்கு பாஸ்கர் , நான், அந்தோணி ராஜன் ஆகிய 3 ஆண்மக்களும், சரோஜா, லலிதா, கலா மற்றும்

ஸ்டீபன் ரவி

லதா ஆகிய 4பெண்மக்களும் வாரிசுகள்.ஆண்மக்களில் அந்தோணி ராஜன் என்பார் தனது மனைவி பூங்கோதை மற்றும் அவரது மகன் கெவின் ஆகியோரை வாரிசாக விட்டு விட்டு காலம் சென்றுவிட்டார்.

5. நான் 1999முதல் அதாவது எனது 29வயது முதல் நாளது தேதிவரை அயல் நாட்டில் தொழில் செய்து வருகிறேன். அதற்கு முன் எனது 14வயது முதல் மும்பையில் வேலைபார்த்து வந்தேன்.

6. நான் சிறுவயது முதற்கொண்டு நான் சம்பாத்தியம் செய்த பணத்தை எனது தந்தை ஜெபமாலை மரியான் வசம் கொடுத்து வந்தேன். எனது சம்பாத்தியத்தினை வைத்து கிடைக்கப் பெற்ற பணத்தை வைத்து எனது சகோதரிகளுக்கும், எனது தந்தையால் உரிய சீர்சினத்திகள் செய்துவிக்கப்பட்டும் திருமணமும் நடத்தி வைக்கப்பட்டது. அது எங்கள் உற்றார் உறவினருக்கு தெரியும்.

7. எனது தந்தை 24.2.23தேதியில் காலம் செல்லும் போது 90வயது உடையவர் ஆவார். ஷையார் இறப்பதற்கு முன் 10வருட காலமாக மகள் கலா பராமரிப்பில் இருந்து வந்தார். எனது தந்தை சுமார் 10வருடகாலமாக துரைக்குடியிருப்பில் கீழுரில் உள்ள கதவு எண் 11/43ய் என்னை தவிர்த்து மற்ற இரு ஆண்மக்களும் , அதுபோல் 1ம் அயிட்ட சொத்தை வாதி வீடு கட்டி குடியிருக்கு ஏதுவாகவும் ,அதுபோல் 2ம் அயிட்டச் சொத்தை பிழைப்பிற்காகவும் எனக்கு தருவதாக உறுதி கூறி அதன் பேரில் பூர்வீக வீட்டின் சுவாதீனத்தை மற்ற இரு ஆண்மக்கள் வசம் ஒப்படைத்து ஷையார் ஷை வீட்டில் குடியிருந்து வந்தார்.

அதுபோல் வழக்குச் சொத்துக்களின் சுவாதீனத்தை எனது வசம் ஒப்படைத்து அதன்பேரில் நான் தபசில் 1ம் அயிட்டச் சொத்தில் புதிதாக கட்டப்பா வீடு ஒன்றினை எனது சொந்த செலவில் கட்டினேன். வழக்கு 1ம் அயிட்டச் சொத்தின் பட்டா எனது தந்தை பெயரில் வழங்கப்பட்டுள்ளதாலும், அதுபோல் எனது தந்தை மீது வைத்த நம்பிக்கை பேரில் எனது தந்தை பெயரில் வரி விதிப்பு, மின் இணைப்பு, போன்றவை ஏற்படுத்தி உரிய தீர்வை மற்றும் மின் கட்டணத்தை செலுத்தி வந்தேன்.

9. எனது தந்தைக்கும், எனது சகோதரான அந்தோணி ராஜா மற்றும் ஷையாரது மனைவிக்கும் வர்மம் உண்டு. அதாவது 2015ல் எனது சகோதரர் அந்தோணி ராஜா மற்றும் ஷையாரது மனைவியும் சேர்ந்து எனது தந்தையை ஏமாற்றம் செய்து கிரயம் மற்றும் நன்கொடைகள் பெற்றுள்ளனர். ஷை காலத்தில் எனது தந்தை மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார்.

10. அதுபோல் எனது சகோதரர் வழக்குச் சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்பது தெரிந்தும் எனது தந்தையை ஏமாற்றம் செய்து அதன்பேரில் எனது தந்தை வழக்குச் சொத்துக்கள் குறித்து எனக்கும் எனது சகோதரிகளில் ஒருவரான கலாவுக்கும் 2.8.16ல் ஒரு இறுதிவிருப்பமுறி ஏற்படுத்தியுள்ளார். ஷை இறுதிவிருப்பமுறி விபரம் எனக்கு வழக்கு காலம் வரை அறியப்படமாட்டாது. எனது தந்தை இறப்பிற்கு 3ஆண்டுகளுக்கு முன்பே மனநலம் பாதிக்கப்பட்டு சுயநினைவின்றி இருந்தார்.

11. எனது சகோதரி கலா முழுச் சொத்தையும் கைப்பற்றும் கெட்ட நோக்கில் பொய்யான சங்கதிகள் கண்டு என் மீது ராதாபுரம் காவல்நிலையத்தில்

11.12.19ல் ஒரு புகாரினை ஏற்படுத்தினார். சை புகாரின் பேரில் என்மீது இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 294(பி) 323 மற்றும் 506(1)ன் கீழும், அதுபோல் பெண்கள் வன்கொடுமை சட்டம் 2002ன் பிரிவு 4ன்படியும் முதல் தகவல் அறிக்கை ஏற்படுத்தப்பட்டது. சை குற்றவியல் வழக்கு ராதாபுரம் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று அதில் தீர்ப்பும் வரப்பெற்றது. அத்தீர்ப்பை எதிர்த்து திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடும் நிலுவையில் உள்ளது

12. வழக்கில் இல்லாத எனது சகோதரி கலா எனது மனநிலை சரியில்லாத தந்தையை வசப்படுத்தி அதன் பேரில் தனது மகனான எதிர்வாதி பெயருக்கு 23.11.20ல் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் பெற்றுள்ளார். அதில் இறுதிவிருப்பமுறியில் கண்ட சொத்துக்கள் பரத்தியப்படுத்தி கொடுப்பதாக கூறப்பட்டுள்ளது.

13. 23.11.20ல் ஏற்பட்டதாக கூறப்படும் செட்டில்மெண்ட் பேரில் எதிர்வாதி கடந்த 28.11.23ல் வழக்குச் சொத்துக்களை அடியாட்கள் துணையுடன் கைப்பற்ற எத்தனித்தார். சை முயற்சி கடும்பிராயசத்தால் தடுக்கப்பட்டது.

14 23.11.20ல் ஏற்பட்டசெட்டில்மெண்ட் பேரில் வழக்குச் சொத்துக்களின் சுவாதீனம் எதிர்வாதி வசம் ஒப்படைக்கப்பட்டிருப்பது இல்லை. அதுபோல் 23.11.20 நாளிட்ட செட்டில்மெண்ட் நடைமுறைக்கு வந்திருப்பதும் இல்லை. 23.11.20 நாளிட்ட செட்டில்மெண்ட் ஜெபமாலை மரியான் நாடாரால் மனம் உவந்து ஏற்படுத்தி கொடுத்திருப்பதில்லை. எனவே சை செட்டில்மெண்ட் வழி வழக்குச் சொத்துக்களில் எதிர்வாதிக்கு எவ்வித உரிமையும் ஏற்படக்

கூடியதல்ல. ஷை ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எனது உரிமையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தக் கூடியதல்ல

15. இந்நிலையில் வழக்கு எதிர்வாதி கடந்த 14.1.24அன்று அடியாட்கள் துணையுடன் வழக்கு சொத்துக்களில் இருந்து என்னை வலுக்கட்டாயமாக வெளியேற்றுகை செய்ய எத்தனித்தார். ஷை முயற்சி கடும் பிராயசத்தால் தடுக்கப்பட்டது. இதனால் வர்மம் கொண்ட எதிர்வாதி ராதாபுரம் காவல்துறை உதவியுடன் என் மீது பொய் வழக்கு ஏற்படுத்தி அதன் வழி ஒருமாத காலத்தில் என்னை தபசில் சொத்துக்களில் இருந்து வெளியேற்றுகை செய்து முழுச் சொத்தின் சுவாதீனத்தை அடைய உள்ளதாக 30.1.23ல் பிரஸ்தாபித்து வருகிறார். அவ்வாறு செய்து விட்டால் எனக்கு அளவிட முடியாத கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுவதாய் உள்ளது

16. வழக்குச் சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டு எனது தனித்த அனுபவத்தில் எதிர்வாதிக்கும், எனது குடும்பத்தாருக்கும் தெரிந்தே சட்டம் கூறும் கால நியதிக்கு மேல் இருந்துவருகிறது. வழக்குச் சொத்துக்கள் பொறுத்தமட்டில் எதிர்வாதி ஒரு 3ம் தரப்பு. ஷையாருக்கு வழக்குச் சொத்துக்களை பொறுத்து எனது உரிமை மூலத்தை மறுக்கவோ/ எனது அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்யவோ சட்ட அருகதை இல்லை.

17. எதிர்வாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதிகள் உண்மையல்ல. ஷை சங்கதிகள் வழக்கு நோக்கிற்காக கூறப்பட்டுள்ளது.

18. வழக்கு 1மற்றும் 2ம் தபசில் சொத்துக்களை எனக்கு ஒதுக்கி தருவதாக எனது தந்தை எக்காலத்திலும் கூறவும் இல்லைஎன்பதும், வழக்கு தபசில்

சொத்துக்களின் சுவாதீனத்தை என்னிடம் ஒப்படைக்கவும் இல்லை என்பதும், வழக்கு 1ம் தபசில் சொத்தில் எனது தந்தை தனது சுயசம்பாத்தியம் மற்றம் தனது சொத்துக்களில் வந்த வருமானதை கொண்டு தான் வழக்கு 1ம் தபசில் கண்டுள்ள மட்டப்பா வீட்டினை கட்டினார் என்பதும், வீட்டின் பட்டா அவர் பெயரிலேயே ஏற்பட்டுடிருந்தது என்பதும் அத்துடன் வீட்டு வரி மற்றும் மின் இணைபபு ஆகியவையும் எனது தகப்பனார் பெயரிலேயே ஏற்பட்டு அவர் தான் அவற்றை செலுத்தி வந்தார் என்பதும் உண்மையல்ல. பட்டா மற்றும தீர்வை எனது தந்தை பெயரில் என்னால் ஏற்படுத்தப்பட்டது ஆகும்.

19. மேலும் எனக்கு எனது தந்தை துரைக்குடியிருப்பு கீழுரில் உள்ள கான்வெண்ட் தெருவில் வீட்டு மனை கொடுத்து அதில் சொந்தமாக வீடும் கட்டி கொடுத்துள்ளார் என்பது உண்மையல்ல. கான்வெண்ட் தெருவில் உள்ள வீடும் எனது சுயசம்பாத்தியத்தில் கட்டப்பட்டது. அதற்கு எனது தந்தை எவ்வித நிதி உதவியும் செய்திருப்பதில்லை.

20. எனதுதந்தை ஜெபமாலை மரியான் வழக்கு தபசில் சொத்துக்களை பொறுத்து அவற்றை எனக்கும் மற்றும் எனது சகோதரிக்கும் கொடுப்பது குறித்து 2.8.16 தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்திருந்தார் என்பது உண்மையே. ஆனால் அந்த உயிலினை ஜெபமாலை மரியான் 15.2.21தேதியில் ராதாபுரம் சார்பதிவாளர் அலுவலக ஆவணம் எண் 18/21ன் படி ரத்து செய்துவிட்டார் என்பது நாளது தேதிவரை எனக்கு அறியப்படமாட்டாது

21. எனது தந்தை தனது மகள் கலாவின் மகனும் பிரதிவாதியுமான அஜீத் என்பவருக்கு அன்னார் ஊனமுற்றவர் என்பதாலும், அவரின் மீது தாத்தா ஜெபமாலை மரியானுக்கு இருந்த அன்பு மற்றும் அ பிமானத்தினாலும் அவருக்கு ஒரு ஆதரவு செய்து தர வேண்டும் என்ற விருப்பத்தாலும் தனக்கு சொந்தமான வழக்கு 1ம் தபசில் 2ம் தபசில் சொத்துக்களை பிரதிவாதி பெயருக்கு ராதாபுரம் சார்பதிவாளர் அலுவலக ஆவணம் எண் 4878/2020 நாள் 23.11.20ன் படி ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்து தபசில் சொத்துக்களின் அனுபோகத்தையும் கொடுத்துவிட்டார் என்பதும், அதுமுதல் தபசில் 1மற்றும் 2ம் சொத்துக்களில் பிரதிவாதியின் அனுபோகத்தில் தான் உள்ளன என்பதும், சொத்துக்களுக்கான பட்டா மற்றும் நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா ஆகியவற்றை பிரதிவாதி பெயரில் பெற்று தனித்த அனுபோகம் செய்து வருகிறார் என்பதும், 1ம் தபசில் சொத்தான வீட்டின் மின் இணைப்பும் பிரதிவாதி பெயரில் மாற்றம் செய்யப்பட்டு பிரதிவாதி தபசில் சொத்துக்களுக்கு முழுமையான சுவான்தார் நிலையில் அனுபோகம் செய்து வருகிறார் என்பதும் உண்மையல்ல. எதிர்வாதி கூறும் பட்டா , தீர்வை வழக்குச் சொத்துக்களில் எனது உரிமையை கட்டுப்படுத்தக் கூடியதல்ல. சொத்தின் சுவாதீனம் எனது வசம் உள்ளது

22. 23.11.2020 தேதியில் எனது தந்தை ஜெபமாலை மரியான் நாடார் தனது மகள் கலாவின் ஊனமுற்ற மகன் அஜீத்துக்கு தனது சுய விருப்பத்தின் பேரிலும் தனது பேரன் அஜீத்மீது கொண்ட அன்பினாலும் ஊனமுற்ற தனது பேரனுக்கு ஒரு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் பேரில் அன்னார் தனக்கு முழுமையாக பாத்தியப்பட்டு தனது பெயரில் பட்டா

ஏற்பட்டு முழு சுவான்தார் நிலையில் அனுபவித்து வந்த வழக்கு தபசில் கண்டுள்ள சொத்துக்களை சட்டப்படி ராதாபுரம் சார்பதிவாளர் அலுவலக ஆவணம் எண் 4878/2020ன் படி பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் செய்து கொடுத்து அவற்றின் அனுபோகத்தையும் அன்றைய தினமே பிரதிவாதி வசம் ஒப்படைத்துவிட்டார் என்பதும், பிரதிவாதியும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக தனது பெயரில் பட்டா மற்றும் நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா ஆகியவற்றை பெற்றும் 1ம் தபசிலில் உள்ள வீட்டின் மின் இணைப்பை தனது பெயரில் மாற்றம் செய்தும் அனுபவித்து வருகிறார் என்பதும், தபசில் சொத்துக்கள் பிரதிவாதியின் முழுமையான சுவாதீனத்தில் தபசில் சொத்துக்களை சட்டப்படியே பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்பதும் உண்மையல்ல. 1ம் அயிட்டச் சொத்தில் உள்ள வீடு எனது தனிப்பட்ட சம்பாத்தியத்தில் கட்டப்பட்டது, எனது தந்தைக்கு ஓரளவு வசதிமட்டுமே உண்டு. ஷை சொத்துக்களுக்கு நிதி உதவிசெய்தது நான் மட்டுமே

23. உண்மையில் இநத பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரி கலாவின் மகன் ஆவார் என்பது மட்டுமே உண்மை. ஜெபமாலை மரியான் (இந்த பிரதிவாதியின் தாத்தா) எதிர்வாதிக்கு சட்டப்படி வழக்கு தபசில் சொத்துக்களை செட்டில்மெண்ட் மூலம் பாத்தியபடுத்தி கொடுத்து உள்ளார் என்பதும் இதனை கேள்வி கேட்க வழக்கு எனக்கு எந்த உரிமையும் அருகதையும் இல்லை என்பது மறுக்கப்படுகிறது

24. இவ்வழக்கிற்கு எவ்வித காரண காரியமும் இல்லை என்பது மறுக்கப்படுகிறது

5. வழக்குச் சொத்துக்கள் எக்காலத்திலும் எனது சுவாதீனத்தில் இருந்ததில்லை என்பதும் அவை எப்போதும் பிரதிவாதியின் சுவாதீனத்திலேயே உள்ளன என்பதும், எனவே வழக்குரை பரிகாரம் 1க்கான நீதிமன்ற முத்திரைக் கட்டணம் தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டண சட்டம் பிரிவு 25(எ)ன் கீழ் செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதும், ஆனால் முத்திரைக்கட்டணம 25(பி)ன் கீழ் செலுத்தப்பட்டுள்ளது தவறு என்பதும் எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படக் கூடியதாய் உள்ளது என்பதும் மறுக்கப்படுகிறது. வழக்குச் சொத்துக்கள் எனது தனித்த அனுபவத்தில் உள்ளதால் நீ.ம.மு.கட்டண சட்டம் 25(எ)ன் நியதியை நாடவேண்டியதில்லை.

26. வழக்குரை சொத்துக்கள் ஜெபமாலை மரியானின் சுயஆர்ஜித சொத்துக்கள் ஆகும் என்பதும் அவரது சொத்துக்களை தனது பேரன் அஜீத்(மகளின் மகன்)க்கு செட்டில்மெண்ட் செய்து கொடுக்க அன்னாருக்கு முழு உரிமை உள்ளது என்பதும், எனவே என்னால் குறித்த வகை மாற்றீடு சட்டம் (Specific Relief Act1963) பிரிவு 31ன் கீழ் செட்டில்மெண்ட் ஆவணம் எண் 4847/2020 நாள் 23.11.2020ய் ரத்து செய்ய கோரி பரிகாரம் கேட்டு அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்கட்டணச் சட்டம் பிரிவு 40ன்கீழ் நீதிமன்ற கட்டணம் செலுத்தியிருக்க வேண்டும் என்பதும் அவ்வாறு நீதிமன்ற முத்திரைக்கட்டணம் செலுத்தாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்பதும் உண்மையல்ல. எதிர்வாதி கூறும் செட்டில்மெண்டில் நான் ஒரு தரப்பு அல்ல. எனவே நீ.ம.மு.கட்டண சட்டம் பிரிவு 40 வழக்கிற்கு பொருந்தக் கூடியதல்ல

27. எனது பக்கம்

1. எனது பெயரில் உள்ள கடவுச் சீட்டு 1999-2009 சான்றொப்பம் செய்யப்பட்டது வா.சா.ஆ1ஆகவும்

2. எனது பெயரில் உள்ள கடவு சீட்டு 2012-2022முடிய சான்றொப்பம் செய்யப்பட்டது வா.சா.ஆ2ஆகவும்

3. 2.8.2016 நாளிட்ட கிரயத்திருப்பி [illegible] - சான்றிட்ட ஒளிநகல் - வா.சா 3 ஆகவும்

4. 12.12.2019 நாளிட்ட வாதி மீது [illegible]

5. 23.11.20 நாளிட்ட செட்டில்மெண்ட் எதிர்வாதி பெயருக்கு ஏற்பட்டது சான்றிட்ட ஒளிநகல். வா.சா.ஆ5ஆகவும்

குறியீடு செய்ய வேண்டியது.

28ஆகவே சமூகம் நீதிமன்றம் கிருபை செய்து

1. வழக்கு சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து அதற்கு பின்னீடாக வழக்குச் சொத்தில் [redacted] தனித்த அனுபவத்திற்கு எதிர்வாதியோ/ வகையறாக்களோ/முகவர்களோ இடைஞ்சல் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கப்படிக்கும்

2. 23.11.20 நாளிட்ட எதிர்வாதி பெயருக்கு ஏற்பட்ட ராதாபுரம் சார்பதிவு அலுவலக நாளிட்ட ஆவணம் எண் 4878/20 செட்டில்மெண்ட் வழக்குச் சொத்து பொறுத்து [redacted] கட்டுப்படுத்தக் கூடியதல்ல என விளம்புகை செய்து உத்தரவிடவும்

3. வழக்கு செலவுத்தொகைக்கும்

4. மற்றும் சமூகம் நீதிமன்றம் தக்கதென கருதும் இதர பரிகாரம் கிடைக்க உத்தரவிடும்படிக்கும் நான் வணக்கமாய் பிரார்த்திக்கிறேன்.

வாதி

என் முன் பிரம்மாணமாய் உறுதி கூறி

வள்ளியூரில் வைத்து 07/9/24ல் ஒப்பம் இட்டார்

அட்வகேட்

received copy pray time for cross examination

MS 2465/2025
For Adv
Gregory Pettha Raj

மேன்மை தங்கிய கூடுதல் மாவட்ட
நீதிமன்றம் எண் : 5
வள்ளியூர்

அ.வ.எண். 112 / 2024

=======================

வைஷ வாதி[illegible] பக்கம் வணக்கமாய்
உ.ந.மு. சட்டம் கட்டளை 18 விதி 4([illegible])
மற்றும் பிரிவு 151-ன் கீழ் தாக்கல்
செய்யும் முதல் விசாரணை சாட்சிய
ஆணையுறுதிப்பத்திரம்

=======================

2/2/26

திரு.இ.இராவண்சிவன் பி.எ.,பி.எல்.,

பதிவு எண்:- 948/84

திரு. இரா.ஜெயகணேசன்
பி.இ.,எல்.எல்.பி.,

(ஹானர்ஸ் இன் ஐ.பி.ஆர்.,)

பதிவு எண்:- D/5861/2017

திருமதி. விசாலாட்சி பி.இ.எல்.எல்.பி.

பதிவு எண் 7906/2025

வழக்குரைஞர்கள்

பெருமாள் கோவில் தெரு

வள்ளியூர் -627117